**அ.வ.எண்.13/2023**

**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், நத்தம்.</u>**

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | : 13/2023 | வா.சா. | : 1 |
| பெயர் | : சரவணன் | த/பெ. | : ஆண்டியப்பன் (எ) ராசு |
| தாலுகா | : நத்தம் | கிராமம் | : உலுப்பகுடி |
| தேதி | : 01.04.2026 | வயது | : 49/2026 |

1969–ம் வருடத்திய வகைமுறைச்சட்டம் பிரிவு .44–ன் படி சாட்சி அழைக்கப்பட்டு உறுதியுரை செய்யப்பட்டு அளித்த சாட்சியம்

**<u>1 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

2) 10ம் வகுப்பு முடித்து ITI படித்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள வழக்கு பற்றிய விபரம் எனக்கு தெரியும். பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரை பற்றி தெரியும் என்றால் சரிதான். தாவா வழக்கில் நான் வழக்கு சொத்து மற்றும் காலியிடம் அனைத்தும் எனது தந்தைக்கு பூர்வீக பாதியப்பட்டது என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். இதர சொத்துக்கள் என்று குறிப்பிட்டுள்ள நிலையில் அந்த சொத்துக்கள் தொடர்பான விபரங்கள் வழக்குரையில் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். எந்தெந்த சர்வே நம்பர் என்று தெரியுமா என்றால் தெரியும். சர்வே எண்.470/2, 626/3A3, 460/9A, 460/11, 621/1, 621/8A, 623/1A, 623/5A மற்றும் சில சொத்துக்கள் உள்ளது அதன் சர்வே எண்கள் ஞாபகம் இல்லை, மேற்படி சொத்துக்கள் புண்ணப்பட்டி கிராமத்தில் உள்ளது என்றால் சரிதான். வழக்கில் 05.05.2003 ஆம் தேதி வாய்க்கால் பாகம் பிரிக்கப்பட்டதாக தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான் மேற்படி வாய்க்கால் பாகப்பிரிவினையின் போது யார் யார் இருந்தார் என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல நான் எனது சகோதர சகோதரிகள் எனது

அம்மா அப்பா மற்றும் எனது நண்பர்கள் வீரப்பன், வெள்ளைச்சாமி, எனது மாமா வெள்ளைச்சாமி, எனது பெரியப்பா மகன் கணேசன் ஆகியோர் இருந்தார்கள். எந்தெந்த சொத்துக்கள் யார் யாருக்கு ஒதுக்கப்பட்டது என்று தெரியுமா என்றால் எனக்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்கள் பற்றி மட்டும் தெரியும் மற்றவர்களுக்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்கள் பற்றி தெரியாது. எந்தெந்த சொத்துக்கள் எனக்கு ஒதுக்கப்பட்டது என்றால் நான் மேலே சொன்ன சர்வே எண்களில் உள்ள சொத்துக்கள் எனக்கு ஒதுக்கப்பட்டது. பிராது சொத்து விபரத்தில் வீட்டிற்கான சொத்து மட்டும் காட்டப்பட்டு பரிகாரம் கோரப்பட்டுள்ளது என்றாலும் தோட்டம் தொடர்பான சொத்து காட்டப்படவில்லை என்றாலும் சரிதான்.

3) 2003 ஆம் வருடம் பாகப்பிரிவினை செய்யப்பட்டதாக சொல்லும் நிலையில் தற்போது வரை எனது பெயரில் வருவாய்துறை ஆவணங்கள் ஏற்படுத்தப்படவில்லை என்றால் சரிதான். மூன்றாம் பிரதிவாதி பாப்பா எனது தாயார் என்றால் சரிதான். மூன்றாம் பிரதிவாதி பெயரில் 17.12.1989ம் தேதி வழங்கப்பட்ட பட்டாவை வா.சா.ஆ.1ஆக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். எனது தந்தைக்கு சொத்துக்கள் பூர்வீக பாத்தியப்பட்டது என்று தெரிவித்துள்ள நிலையில் அதற்கு முரண்பட்டு எனது தாயார் பெயரில் உள்ள பட்டாவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் தவறுதலாக UDR பட்டா எனது தாயார் பெயரில் ஏற்பட்டுள்ளது. UDR பட்டாவில் தவறுதல் ஏற்பட்டுள்ளது என்று எனது வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரிதான். மூன்றாம் பிரதிவாதி வழக்கு சொத்தை 1,2 பிரதிவாதிக்கு தான செட்டில்மெண்ட் எழுதி கொடுத்துள்ளார் என்றால் தெரியாது. நான் என்ன பரிகாரம் கேட்டு வழக்கு

தாக்கல் செய்துள்ளேன் என்றால் வீடு எனக்கு பாத்தியமானது என்றும் பிரதிவாதிகள் மேற்படி சொத்தை அனுபவம் செய்வதில் இடையூறு செய்யக்கூடாது என்றும் பரிகாரம் கேட்டுள்ளேன்.

4) 3ம் பிரதிவாதி 1,2 பிரதிவாதிகளுக்கு எழுதி கொடுத்த தான செட்டில்மெண்ட் ஆவணத்தை செல்லாதது மற்றும் இல்லா நிலையது என்று விளம்புகை செய்யக்கோரி பரிகாரம் கேட்டுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி ஆவணம் தொடர்பாக எதிர்வழக்குரை தாக்கல் செய்தபிறகு தான் தெரியவந்தது. தான செட்டில்மெண்ட் ஆவணத்தின் அடிப்படையில் 1, 2 பிரதிவாதிகள் தனது பெயரில் பட்டா மாறுதல் செய்ய கோரி நத்தம் வட்டாட்சியர் அவர்களிடம் மனு கொடுத்தார்கள் என்றால் அது பற்றி தெரியாது. பட்டா மாறுதல் செய்யக்கோரி 1,2 பிரதிவாதிகள் நத்தம் வட்டாட்சியரிடம் மனு செய்தார் என்றாலும் அந்த மனுவின் மீதான விசாரணைக்கு எனக்கும், 7ம் பிரதிவாதிக்கும் அறிவிப்பு அனுப்பப்பட்டு அந்த விசாரணையில் நான் பங்கு கொண்டேன் என்றாலும் ஞாபகம் இல்லை. தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதா என்றால் ஆமாம். மேற்படி வட்டாட்சியர் விசாரணையில் கலந்து கொண்டு 7 பேர் பெயரில் கூட்டு பட்டா வழங்க சொல்லி வாக்குமூலம் கொடுத்தேன் என்றால் சரிதான். (**08.06.2023ம் தேதிய தகவல்அறியும் உரிமை சட்டத்தின் கீழ் பெறப்பட்ட தகவல் பி.வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 30.05.2023ம் தேதிய நத்தம் வட்டாட்சியர் அலுவலக குறிப்பாணை பி.வா.சா.ஆ.2**

**ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

5) 27.03.2023, 11.05.2023 மற்றும் 22.05.2023 ஆகிய தேதிகளில் நத்தம் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு விசாரணைக்கு சென்ற பிறகுதான் நான் தாவா வழக்கை 28.04.2023ம் தேதி பட்டா மாறுதல் செய்வதை தடுப்பதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல பிரச்சனை செய்து கொண்டே இருந்ததால் வழக்கு தாக்கல் செய்தேன். நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டதால் தான் பட்டா மாறுதல் நடவடிக்கை நிறுத்தி வைக்கப்பட்டது என்றால் சரிதான். கடந்த 27.03.2023 ஆம் தேதி நத்தம் வட்டாட்சியர் அலுவலகத்தில் கொடுத்த வாக்குமூலத்தில் 05.05.2003 ஆம் தேதி பாகப்பிரிவினை நடந்ததாகவோ, வழக்கு சொத்து மற்றும் இதர சொத்துக்கள் எனது பாகத்திற்கு ஒதுக்கப்பட்டதாகவோ குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். சொத்துக்கள் அனைவருக்கும் பொது பாத்தியப்பட்ட சொத்து என்றும் அனைவருக்கும் கூட்டு பட்டா வழங்க வேண்டும் என்றும் தான் தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான். தற்பொழுது வழக்கு சொத்தை முழுமையாக அபகரிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் வாய்க்கரால் பாகப்பிரிவினை நடந்ததாக பொய்யாக தெரிவித்து பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

6) வழக்கு சொத்தானது சட்டப்படி எனது தாயார் 3ம்பிரதிவாதி பாப்பம்மாள் என்பவருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. எனது தாத்தா பெயரில் இருந்த

பட்டாவானது தவறுதலாக எனது தாயார் பெயருக்கு பட்டா ஏற்பட்டுள்ளது. தற்போது வரை வழக்கு சொத்திற்கான பட்டாவானது எனது தாயார் பெயரில் ஊர்ஜிதத்தில் உள்ளது என்றாலும் அந்த பட்டாவை ரத்து செய்ய நடவடிக்கை எடுக்கவில்லை என்றாலும் சரிதான். திருத்தல் பிராதை தாக்கல் செய்வதற்கு முன்பு தாக்கல் செய்துள்ள பிராதில் எனது தாயார் பெயருக்கு தவறுதலாக பட்டா மாறுதல் ஏற்பட்டுள்ளது என்று குறிப்பிட்டு தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். பிரதிவாதிகள் எதிர்வழக்குரையில் தாக்கல் செய்ததற்கு பிறகுதான் எனது தாயார் பெயரில் பட்டா தவறுதலாக ஏற்பட்டுள்ளதாக வாதம் செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் வழக்கில் தெரிவித்துள்ள பெரியகருப்பன் என்பவர் எனது தகப்பனார் ஆண்டியப்பனின் தந்தை முத்துக்காளை அவரது தந்தை தான் பெரியகருப்பன் (அதாவது எனது தகப்பனாரின் அய்யா பெரியகருப்பன் ஆவார்).

7) வழக்கு சொத்துக்கு பெரிய கருப்பன் என்பவரது பெயரில் ஏற்பட்டுள்ள 1383 பசலி அடங்கல் மற்றும் பட்டா தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். எனது தாத்தா முத்துக்காளை பெயரிலோ எனது தந்தை ஆண்டியப்பன் பெயரிலோ அடங்கலோ, பட்டாவோ தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது தந்தை மற்றும் எனது தாத்தா பெயரில் ஏற்பட்டதாக ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யாத நிலையில் வழக்கு சொத்து பூர்வீக சொத்து கிடையாது என்றால் சரியல்ல. 1383 பசலி அடங்கலில் கண்ட பெரியகருப்பன் என்பவரது இறப்பு சான்றிதழோ, வாரிசு சான்றிதழோ தாக்கல் செய்யவில்லை என்றால்

சரிதான். எனது தாத்தா முத்துக்கருப்பன் என்பவரது இறப்பு சான்றிதழ் மற்றும் வாரிசு சான்றிதழ் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வழக்கு சொத்து 3ம் பிரதிவாதி பெயரில் பட்டா ஏற்பட்டுள்ளதால் இந்து வாரிசுரிமை சட்டப்படி அவரின் தனிப்பட்ட சொத்து என்றால் சரியல்ல. அவர் 1,2 பிரதிவாதிகளுக்கு எழுதிக்கொடுத்த தானசெட்டில்மெண்ட் சட்டப்படி செல்லக்கூடியது என்றால் சரியல்ல. வழக்கு சொத்து ஒரு வீடு தான் உள்ளது என்றால் சரிதான். ஆதியில் வழக்கு சொத்து அரசு நிலமாக இருந்து எனது தாயார் பெயரில் பட்டா ஏற்பட்டு கூரைவீடு கட்டி அனுபவம் செய்து வந்து தற்போது ஓட்டுவீடாக மாற்றி வரி செலுத்தி அனுபவம் செய்துவந்தார் என்றால் சரியல்ல.

8) நான் வழக்கில் தாக்கல் செய்துள்ள வீட்டுவரிரசீதுகள், ஊராட்சி மன்ற செயலர் அவர்களை வசப்படுத்தி சட்டத்திற்கு புறம்பாக வீட்டுவரிரசீது பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. நான் திமுக செயலாளராக உள்ளேன் என்றால் சரிதான். நான் எனது அதிகாரத்தை பயன்படுத்தி ஊராட்சி மன்ற செயலர் மூலம் வரிரசீது பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல தற்போது தான் திமுக செயலாளராக உள்ளேன் அதற்கு முன்பு இருந்தே வரிரசீதை பெற்றுள்ளேன். வீட்டு வரி ரசீது மூலமாக பாத்தியத்தை பெறமுடியாது என்றால் சரியல்ல. 3ம் பிரதிவாதியை தவிர வழக்கு சொத்தில் அவரது வாரிசுகள் யாருக்கும் பாகமோ, உரிமையோ கிடையாது என்றால் சரியல்ல.

9) எந்த தேதியில் யார் யார் வழக்கு சொத்தை இடையூறு செய்தார்கள் என்று குறிப்பிட்டு சொல்ல முடியுமா என்றால் செந்தில், ரமணி, ருக்குமணி, தேவி மற்றும் பாப்பா ஆகியோர் இடையூறு செய்தார்கள். அடிக்கடி பிரச்சனை நடந்ததால் எந்த தேதி என்று சரியாக ஞாபகம் இல்லை. 12.03.2023ம் தேதி இடையூறு செய்ததாக பொய்யாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. 28.10.2024ம் தேதி எவ்வித குற்றச்சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்ததற்கு பின்னால் தான் புகார் மனு கொடுக்கப்பட்டு முதல்தகவல்அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி முதல்தகவல்அறிக்கை ஆவணம் சட்டப்படி ஏற்றுக்கொள்ளகூடிய ஆவணம் இல்லை என்றால் சரியல்ல. திருத்தப்பட்ட பிராதில் 28.10.2024ம் தேதி குற்றச்சம்பவம் நடந்ததாக குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல. நான் திமுகவில் கிளை செயலாளராக இருப்பதால் எனது அதிகாரத்தை பயன்படுத்தி போலீசாரை வசப்படுத்தி முதல்தகவல்அறிக்கை பதிவு செய்ய வைத்துள்ளேன் என்றால் சரியல்ல.

10) நான் வழக்கு சொத்தில் எந்த காலத்திலும் வீடு கட்டவில்லை என்றாலும் வீடு கட்டியதாக பொய்யாக சொல்கிறேன் என்றால்சரியல்ல. நான் சிங்கப்பூரில் வேலை செய்து எனது தந்தைக்கு பணம் அனுப்பியதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனது சம்பாத்தியத்தை வைத்து எனது

சகோதரிகளுக்கு திருமணம் செய்து வைத்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதிக்கு கல்வி, திருமணம் ஆகியவற்றிற்கு நான் செலவு செய்ததாக கூறுவது பொய்யானது என்றால் சரியல்ல. வழக்கு சொத்தில் எனக்கு எவ்வித உரிமையோ, பாத்தியமோ கிடையாது என்றால் சரியல்ல. எனவே, வழக்கு தள்ளுபடி செய்யக்கூடியது என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் சொல்லப்பட்டு தட்டச்சரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு சாட்சி சரி என்று ஒப்புக் கொண்டு என் முன்னிலையில் 01.04.2026 கையெழுத்து செய்துள்ளார்.

Tmt.J.Aafreen Begum, M.Com., L.L.M.,
Digitally signed by Tmt.J.Aafreen Begum, M.Com., L.L.M., Date: 2026.04.01 16:40:39 +0530

மா.உ.ம.நீ.நடுவர், நத்தம்.